சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – ஈரோடு விற்பனைக் குழு – வெள்ளாங்கோயில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் – அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியான நாதிபாளையம் கிராமத்தில் ரூ.13.20 கோடி மதிப்பீட்டில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வணிக வளாகம் அமைப்பது– ஈரோடு விற்பனைக்குழு நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது

---

வேளாண்மைத் (வேவி3) துறை

அரசாணை (நிலை) எண்.268 நாள்:26.10.2018

திருவள்ளுவர் ஆண்டு 2049
ஐப்பசித் திங்கள் 09–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.74, வேளாண்மை (வேவி.2) துறை, நாள் 19.03.2018.
2. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கடிதம் நாள் 19.02.2018 மற்றும் 12.05.2018
3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண்.விகுதி3/16566/2018, நாள் 06.07.2018

———

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குட்பட்ட பகுதியில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வணிக வளாகம் அமைப்பதற்காக கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புல எண்.137–இல் உள்ள 10 ஏக்கர் நிலத்தினை, ஈரோடு விற்பனைக்குழுவிற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்காக ரூ.20,10,000/–ஐ ஈரோடு விற்பனைக்குழு நிதியிலிருந்து கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு செலுத்துவதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையினைத் தொடர்ந்து, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தம்முடைய கடிதத்தில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், நாதிபாளையம் கிராமத்தில் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வணிக வளாகம் அமைப்பதற்காக வெள்ளாங்கோயில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியாகவுள்ள, நாதிபாளையம் கிராமத்திலுள்ள புல எண்.137–இல் உள்ள 10 ஏக்கர் நிலத்தினை ஈரோடு விற்பனைக்குழுவிற்கு நில உரிமை மாற்றம் செய்து, முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும்,

(த.பி.பா.)

இதனைத்தொடர்ந்து மேற்குறிப்பிட்ட நிலத்தில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வேளாண் வணிக வளாகத்திற்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக பின்வரும் விவரப்படி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | கட்டுமானப் பணியின் விபரம் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 5000 மெட்ரிக் டன் கிடங்கு கட்டுதல் | 6,25,00,000 |
| 2. | அலுவலகத்துடன் கூடிய கூட்ட அரங்கு கட்டுதல் | 50,00,000 |
| 3. | வங்கிக் கட்டடத்துடன் கூடிய வியாபாரிகள் ஓய்வறை கட்டுதல் | 60,00,000 |
| 4. | உணவு விடுதியுடன் கூடிய விவசாயிகள் ஓய்வறை கட்டுதல் | 60,00,000 |
| 5. | பரிவர்த்தனைக் கூடம் கட்டுதல் | 60,00,000 |
| 6. | இருபாலர்களுக்கான கழிவறைக் கட்டடம் கட்டுதல் | 12,00,000 |
| 7. | எடைமேடை அமைத்தல் | 25,00,000 |
| 8. | உலர்களம் அமைத்தல் பணி | 12,00,000 |
| 9. | வெளிப்புற தெரு விளக்கு அமைத்தல் பணி | 30,00,000 |
| 10. | முகப்பு வாயில் அதனுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 1,65,00,000 |
| 11. | சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 80,00,000 |
| 12. | தாழ்வான நிலப்பகுதியினை சமன்படுத்தும் பணி | 21,00,000 |
| 13. | விரிவாக்க பணிக்கு (Escalation Charges for 10 %) | 1,20,00,000 |
| | **மொத்தம்** | **13,20,00,000** |

3. மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்கான மாவட்ட அளவிலான குழுவாலும் மற்றும் ஈரோடு விற்பனைக்குழுவாலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், எனவே கோபிசெட்டிபாளையம் வட்டம், வெள்ளாங்கோயில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியான நாதிபாளையம் கிராமத்தில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வணிக வளாகத்தை அமைத்திடும் பணிகளை ரூ.13,20,00,000 மதிப்பீட்டில் ஈரோடு விற்பனைக் குழு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு அரசின் நிர்வாக அனுமதி வழங்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 3–இல் உள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனையேற்று, ஈரோடு விற்பனைக்குழுவின் கீழ் இயங்கும் வெள்ளாங்கோயில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியான நாதிபாளையம் கிராமத்தில் புல எண்.137–இல் உள்ள 10 ஏக்கர் நிலத்தில் நெல் சேமிப்புக் கிடங்குடன் கூடிய வணிக வளாகம் அமைப்பதற்கான பணிகளை ஈரோடு விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து ரூ.13.20 கோடி (ரூபாய் பதின்மூன்று கோடியே இருபது இலட்சம் மட்டும்) செலவில் மேற்கொள்வதற்கு, 1991–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) விதி எண்.96–இன்படி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.38575/நிதித் (வேளாண்) துறை/2018, நாள் 24.08.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம்,
தனி அலுவலர் / செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை–108.
<u>நகல்:</u>
வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்,
வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மைத் (அநமு.3) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

26/10/18
பிரிவு அலுவலர்